Tiaano® Innovation In Inert Metals

**Ti Anode Fabricators Pvt. Ltd.**

An ISO 9001 : 2008 Certified

Ti Nb Ir Ta Ru Pt

#48 Noothanchary, Madambakkam, Chennai – 126, India. Ph: 0091 44 2278 1148 Fax: 22781362 Email: info@tianode.com web: www.tianode.com

# “கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா”

## GOAL 2011-2012

- **Endeavor** : QUALITY
- **Turnover Target** : 240% ↑
- **Products for ...**
  - Consumer Market : 3%
  - Green Environment : 25%
- **Rejection Rate** :100% ↓

## TESTIMONIALS

- **Customers...**
  - Up to Oct 11 : 490 Nos.
  - Up to Sep 11 : 490 Nos.
- **Performance Oct. ‘11 ...**
  - Turnover growth : 13.93%
  - Employment growth : NIL
  - 100% Attendance : 15.34%

## MANAGEMENT

- **Managing Director**
  - Mr. Velappan Jeyakummar
- **Board of Directors**
  - Ms. P.E. Nancy
  - Ms. J. Vanajambika

## OUR FORMULATIONS

Tiaano – Electro Chemical & Exotic Metal Equipments

Aquafil – Water Disinfection Equipments.

Fib Tec GRP Mandrels – FRP/ GRP Mandrels & Tanks

HydroGen Go Green – HHO Generators

Titanictrade We Deliver Value Chain – Portal for Exotic Metals

– Tiaano Vidyashrm (CBSC Pattern School)

## ACHIEVEMENT




## நீங்கள் வேலைபார்க்கும் நிறுவனத்தில் தலைவராகத் தயாராகுங்கள்..!!

இந்தக்கதை உங்கள் கதையாக இருக்கக் கூடாது என்ற பிரார்த்தனையோடு படிக்கத் துவங்குங்கள்.

தமிழ்நாட்டிலிருந்து டெல்லி செல்லும் அந்த ரயிலில்தான் திருவாளர் டென்ஷன் அமர்ந்திருந்தார். அவரைப் பற்றி தெரியாததால் அவரோடு பயணம் செய்த எல்லோரும் நன்றாக வாங்கிக் கட்டிக்கொண்டார்கள். விக்கல் எடுத்த ஒருவர் திருவாளர் டென்ஷன் மினரல் பாட்டில் வைத்திருப்பதை பார்த்துவிட்டு, “சார் கொஞ்சம் தண்ணீர் கொடுங்களேன்” என்றார். “பைப்ல வரும் போய் குடிச்சிக்க” என்று பதில் வந்தது வழக்கமான டென்ஷனோடு. கேட்டவருக்கு விக்கல் நின்று விட்டது.

அடுத்தொருவர் திருவாளர் டென்ஷன் படித்துவிட்டு ஓரமாக சுருட்டி வைத்திருந்த தினசரியைப் பார்த்துவிட்டு, “சார் கொஞ்சம் பேப்பர் கொடுங்களேன் படிச்சிட்டு தர்றேன்” என்றார். ஓசி பேப்பர்படிக்கிறதுக்கின்னே ரயில்ல வருவீங்களாய்யா, காசு கொடுத்து பேப்பர் வாங்கிற பழக்கமெல்லாம் கிடையாதோ..” என்றவாறே ஜன்னல்பக்கம் திரும்பிக் கொண்டார். இரண்டு நாள் பயணத்தில் இது போல் நிறைய நடந்தது.

திருவாளர் டென்ஷன் இறங்க வேண்டிய ஸ்டேஷன் வந்தது. தனது பெட்டி படுக்கைகளை எடுத்துக்கொண்டு ரயிலை விட்டு இறங்கி இரண்டடிதான் நகர்ந்திருப்பார், அப்போது ரயிலில் அமர்ந்திருந்த ஒருவர் அவசரமாய் அழைத்தார் ‘சார் சார், விட்டுட்டுப் போறீங்களே’ திருவாளர் டென்ஷன் சட்டென்று தனது லக்கேஜ்களை பார்த்தார். எல்லாம் சரியாகத்தான் இருந்தது. ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தார், அங்கேயும் எதையும் காணோம் எதையும் விட்டுவிடவில்லை பிறகு எதற்காக அழைத்தீர்கள் என்பதுபோல கேள்விக்குறியோடு பார்த்தார், திருவாளர் டென்ஷன்.

கூப்பிட்டவர் சொன்னார், “உங்களைப் பற்றிய தவறான அபிப்ராயத்தை எல்லோர் மனதிலும் விட்டுவிட்டுப் போகிறீர்களே”. திருவாளர் டென்ஷனுக்கு கன்னத்தில் அறைந்தது போல இருந்தது. இரண்டு நாட்கள் எல்லோருடனும் பயணித்தேன். இந்த நாட்களில், ‘என்னைப்பற்றி எப்படிப்பட்ட அபிப்ராயத்தை ஏற்படுத்தி இருக்கிறேன்?’ என்று யோசிக்கத் தொடங்கினார்.

தலைவராக விரும்புகிறவர்கள் முதலில் முடிவு செய்ய வேண்டிய ஒன்று, என்னைப்பற்றி எப்படிப் பட்ட அபிப்ராயத்தை ஏற்படுத்தப் போகிறேன்? ஏனென்றால் நீங்கள் ஏற்படுத்தப் போகும் அபிப்ராயத்தை பொறுத்துத்தான் இந்த உலகம் உங்களை நோக்கி வருவதும் அல்லது உங்களை விட்டு விலகி ஓடுவதும் இருக்கிறது. எனவே இப்பொழுதிலிருந்து யோசியுங்கள், ‘என்னைப்பற்றி எப்படிப்பட்ட அபிப்ராயத்தை ஏற்படுத்தப் போகிறேன்?’

உங்கள் நிறுவனத்தின் உயர் பொறுப்புகளில் இருப்பவர்களிடம் என்ன அபிப்ராயத்தை ஏற்படுத்தப் போகிறீர்கள்? இவரிடம் எந்த வேலை கொடுத்தாலும் ரிசல்ட்டோடு வருவார் என்றா? இவரிடம் எந்த வேலை சொன்னாலும் நடக்காது என்றா? உங்களோடு இணைந்து பணியாற்றுகிறவர்களிடம் என்ன அபிப்ராயத்தை ஏற்படுத்தப் போகிறீர்கள்? இவரிடம் சந்தேகம் கேட்டால் சிறப்பாக வழி காட்டுவார் என்றா? போய் நின்றால் எரிந்து விழுவார். இவர் பக்கமே தலை வைத்துப் படுக்கக் கூடாது என்றா?

உங்கள் கீழ் பணிபுரிபவர்களிடம் என்ன அபிப்ராயத்தை ஏற்படுத்தப் போகிறீர்கள்? நல்ல ஒரு தலைவரின் கீழ் பணியாற்றுகிறேன் என்ற பெருமிதத்தையா?, ‘எப்ப இந்த ஆளை மாத்துவாங்கன்னு தெரியலையே?, என்ற ஆதங்கத்தையா?

நீங்கள் திட்டமிட்டுவிட்டால் எப்படிப் பட்ட அபிப்ராயத்தையும் ஏற்படுத்திவிட முடியும் தேவை, சிறு ஒத்திகை மட்டுமே.

Compiled by Mr. Velappan Jeyakummar
Managing Director

## FUNCTIONAL WISHES



**Christmas**

**25th December**

**Best Wishes from Tiaano Employees**

## EXTERNAL SUPPORT

Banking : M/s. UCO Bank

Auditing : M/s. Nisar & Kumar

AQ Auditing : M/s. Juran Quality

Legal Advisers : Lr. M.K. Govindan

: Lr. V. Benedict Vincent

Tech. Consultant: Dr.G.S. Viswanath

Central Excise : Mr. R. Raghavan

Health Care : M/s. Bethesda Hospital

Tel:22294565

Jeya Clinic,

Tel: 98408 73107

## BIRTH DAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே!



**Mrs. M. Indumathy** **Dec 06**
Purchase

**Mr. S. Purushothaman** **Dec 10**
Production

**Mr. Velappan Jeyakummar** **Dec 12**
Managing Director

**Mr. P. Premkumar** **Dec 13**
Production

**Mr. K. Aruldoss** **Dec 15**
Production

**Mr. A. Duraiswami** **Dec 18**
Production

**Mr. M. James** **Dec 27**
Production

**Mr. R. Josper Kingston** **Dec 31**
Engineer - Design

**Best Wishes from Tiaano Employees**

## கான்.:.பிடன்ஸ் கார்னர்

ஸ்காட்லாந்தில், கிளார்க் என்பவரின் குடும்பம் அமெரிக்கா போக வேண்டும் என்று கனவு கண்டது. வறுமையில் இருந்த கிளார்க்கும் அவர் மனைவியும் நீண்ட காலம் உழைத்துப் பணம் சேர்த்தனர். அப்போதெல்லாம் கப்பல் பயணம்தான். ஒரு வழியாய்ப் பயண ஏற்பாடு நிகழ்ந்தது. புறப்பட 7 நாட்கள் இருக்கும் போது, அவர்களின் இளைய மகனை நாய் கடித்தது. ரேபிஸ் பரவும் என்கிற சந்தேகம் இருந்ததால் 14 நாட்கள் கழித்துதான் பயணமாக வேண்டும் என்றனர்.

14 நாட்களுக்குப் பிறகு பயணச்சீட்டு கிடைக்காது என்று தெரியும். கிளார்க் குடும்பம் மனமுடைந்தது. தன் துரதிஷ்டத்தை நொந்து கொண்டு, தங்கள் இளைய மகனை மனதுக்குள் திட்டிக் கொண்டார் கிளார்க். ஐந்து நாட்கள் கழித்து தகவல் கிடைத்தது. அவர்கள் போக வேண்டிய கப்பல் கவிழ்ந்தது, பல நூற்றுக்கணக்கானவர்கள் இறந்து விட்டதாக, அந்தக் கப்பல்தான் டைட்டானிக்!!

சில வாய்ப்புகள் கைநழுவிப் போவதும் நன்மைக்காகத்தான்.

–கான்பிடன்ஸ் கார்னர் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது

## Mastermind success! You can, if you think you can

Have you heard of Roger Bannister? He was the first athlete to run the mile in less than four minutes. In doing so, he not only broke the four minute barrier, but also taught us all a valuable lesson.

Back in the 1950's, the world record 4 minutes 1.4 seconds was held by Sweden's Ginder Haegg. The record stood for several years since it was set in 1945. Athletes, experts and the world were convinced that it was impossible to run a mile in less than four minutes. Some even argued that the human body was biologically incapable of running the mile in less than four minutes!

And then, on 6th May, 1954, Roger Bannister did the impossible. He broke the four minute barrier, finishing the race in 3 minutes, 59.4 seconds. His rival Charles Landy had thrice run the mile in less than 4 minutes 2 seconds without breaching the 4 minute mark. The four minute barrier was "like a wall", Landy had said. But guess what? Just 56 days after Bannister's feat, Landy ran the mile in 3 minutes 57.9 seconds. And by 1957, 16 athletes around the world ran the mile in under 4 minutes. The 4 minute mental barrier was truly shattered!

What really happened? Did coaches get smarter and teach the athletes new techniques? Did running shoes get more sophisticated? Did bodies suddenly get stronger? No. The 4 minute barrier it turned out was not a physiological one just a mental one! As Roger Bannister explained later, it seemed illogical that you could run a mile in 4 minutes and a bit, but not break 4 minutes. His mind refused to accept that barrier. That made all the difference.

Once that mental barrier was broken by Bannister, everyone believed it could be done! And once the belief changed, the rest was easy. It's important to understand that our achievements in life are limited not by what we can do, but by what we think we can do. More than ability, it's our attitude that makes the difference. As Henry Ford said, "If you think you can, you can. And if you think you can't, you are right".

You will probably find your mind constantly grappling with two competing thoughts: 'I can't!' and 'I can!' How do you ensure the 'I can' wins? How can we break our mental barrier of 'I can't'? There was a man in Alaska who had a black dog and a white dog. His dog fights attracted large crowds. Every week people would bet on which dog would win. Sometimes the black dog won, and sometimes the white one. One lady noticed that no matter which dog won, the owner always bet on the right dog, and won each week. When the man retired the two dogs, the lady asked him the secret.

"Simple," said the man. "I always bet on the dog I had been feeding all week." So whether 'I can't' wins in your mind or 'I can', depends on which thought you are feeding! Feed the 'I can' dog in your mind. The thought you feed, grows! Focus on your strengths, and they will grow. Or keep thinking of your weaknesses and your fears. And unfortunately they'll grow too. You won't always find a Bannister to break your mental barrier. You need to do it yourself. Once you start feeding the 'I can' thought, you will achieve more than you ever thought was possible!

Compiled by Mr. C.Abilash
Facilitation

## தெரிந்து கொள்வோம்

### பாகற்காய்

- சர்க்கரை நோயாளிகள் அனைவரும் எந்தவித தயக்கமும் இன்றி உணவில் சேர்த்துக் கொள்ளும் காய்கறி பாகற்காய்தான்
- பாகற்காயை புளியுடன் சேர்த்து சமைப்பது மிகவும் நல்லது.
- பாகற்காயின் இலைகளை அரைத்து உடல் முழுவதும் பத்துபோட்டால் சிரங்கு ஒழிந்துவிடும்.
- பாகற்காய் நீரிழிவு வியாதிக்கு மட்டுமல்ல ஜுரம், இருமல், இளைப்பு, மூலம், வயிற்றில் பூச்சித் தொல்லை இருப்பவர்களுக்கும் சிறந்த மருந்தாக உள்ளது.

### ஆப்ப சோடா

- தக்காளி சூப்பில் ஒரு சிட்டிகை ஆப்ப சோடா போட்டுக் குடித்தால் புளித்த ஏப்பம் வருவது நீங்கும்.
- வேர்க்குரு நீங்க ஒரு டீஸ்பூன் ஆப்ப சோடாவைக் கொஞ்சம் தண்ணீரில் கலக்கிப் பூசவும்.
- ஆப்ப சோடாவைத் தண்ணீர் விட்டு கொப்பளத்தில் பூசினால் விரைவில் குணமடையும்.
- பல் வலிக்கு ஆப்பசோடாவை ஈறின் மீது அழுத்தித் தடவவும். காலையிலும் மாலையிலும் ஒரு டம்ளர் தண்ணீரில் ஆப்ப சோடாவைக் கலந்து வாய் கொப்பளித்தால் பற்கள் ஆரோக்கியமாக இருக்கும்.

### பூண்டு

- வயிறு சம்பந்தப்பட்ட நோய்களுக்கு வெள்ளைப் பூண்டு நல்லது என்பது தெரிந்த விஷயம். தெரியாதது அது மலேரியா மற்றும் கேன்சருக்கும் கண்கண்ட மருந்து என்பது.
- வெள்ளைப் பூண்டில் இயற்கையிலேயே அடங்கியுள்ள டைசல்பைடு என்ற ரசாயனப் பொருள் பூஞ்சை மற்றும் பாக்டீரியா நோய்க் கிருமிகளைத் தாக்கி அழிக்கின்றது. மேலும், கேன்சர் செல்கள் பரவாமலும் தடுக்கின்றது. இது தவிர மலேரியாவை உண்டாக்கும் 'பிளாஸ்மோடியம் பால்சிபாரம்' என்ற ஒட்டுண்ணியையும் தாக்கி அழிக்கின்றன. அட்லாண்டாவிலுள்ள டொரண்டோ பல்கலைக்கழக ஆய்வின் முடிவு இது.

Compiled by : Mr. S. Siva Deepan
Facilitation

### நீங்கள் நடக்க நடக்க மின்சாரம்

மின்சாரம் இல்லாத உலகை நம்மால் கற்பனை செய்து கூட பார்க்க முடியவில்லை. அந்த அளவுக்கு நம்முடைய அன்றாட தேவைகளில் மின்சாரம் முதல் இடம் பிடித்துள்ளது. அதனால் தான் பல வழிகளிலும் மின்சாரத்தை உருவாக்க பலர் முயன்று கொண்டு இருக்கிறார்கள். அனல் மின்சாரம், அணு மின்சாரம், காற்றில் இருந்து, அலையில் இருந்து, நீரில் இருந்து, சூரிய ஒளியில் இருந்து, கழிவுகளில் இருந்து இப்படி பல வழிகளில் மின்சாரம் தயாரிக்கப்பட்டிருக்க, தற்பொழுது "நீங்கள் நடந்தால் போதும் மின்சாரம் கிடைக்கும்" என்று மின்சாரம் தயாரிக்கும் Tiles கண்டுபிடித்திருக்கிறார் லாரன்ஸ் என்ற ஆய்வாளர்.

அதிகமாக மக்கள் நடக்கும் சாலை பகுதிகளில் இந்த Tiles பதிக்கப்படும் எனவும், மக்கள் இந்த Tiles மேல் ஏறிப்போவதினால் உண்டாகும் இயக்க ஆற்றல் மின்சார ஆற்றலாக மாற்றப்படும் எனவும் இந்த கண்டுபிடிப்பை கண்டுபித்துள்ள ஆய்வாளர் சொல்லுகிறார். இந்த Tiles கொண்டு ஒரு மணி நேரத்திற்கு 2.1 வாட் மின்சாரம் தயாரிக்கப்பட்டு அந்த மின்சாரத்தை சாலை ஓரங்களில் இருக்கும் விளக்குகளுக்கு பயன்படுத்தலாம் என சொல்லுகிறார்.

100 சதவீத மறு சுழற்சி செய்ய முடிகிற மூலப்பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படும் இந்த Tiles 5 வருடங்களுக்கு கிட்டதட்ட 20 மில்லியன் மிதிகளை (நமது அடிகள்) வாங்கிக் கொள்ளும் சக்தி படைத்தது. இந்த மின்சாரத்தை சிறிய லித்தியம் பாட்டரிகளில் சேமிக்கவும் முடியும் என்பது கூடுதல் தகவல்.

Compiled by : Mrs. M. Shahin
Marketing

## நம்பித்தான் ஆகவேண்டும்

## 5S (தொடர்ச்சி V)

### ஐந்து குள்ளர்கள்

அடுத்து, ஒரு தலைப்பைச் சார்ந்த புத்தகங்களையும் மொத்தமாக அடுக்காமல், ஆசிரியர் வரிசைப்படியோ, வெளியான ஆண்டு வரிசைப்படியோ, சரித்திர நாவல்கள், சமூக நாவல்கள், அறிவியல் புனைகதைகள் என்பதுபோன்ற உபதலைப்புகளாகவோ தொகுக்க வேண்டும்.

அவை எல்லாவற்றையும்விட முக்கியமாக, ஓர் அலமாரியிலிருந்து புத்தகத்தை வெளியில்எடுத்துப் பார்க்கிறவர்கள், அந்தப் புத்தகம் பிடிக்காவிட்டால், பழைய வரிசை கலையாதபடி மீண்டும் அடுக்க வேண்டும்.

இப்படிப் பல விஷயங்கள் மாறினால்தான் – சம்பந்தப்பட்ட எல்லா மகானுபாவர்களும் மனம் வைத்தால்தான் – பத்து நிமிஷத்தில் நமக்கு வேண்டிய புத்தகத்தை எடுக்க முடியும். இல்லாவிட்டால், இந்திரப்ரஸ்தத்தில் கஜானா தொலைந்த கதைதான்!

இந்திரா பார்த்தசாரதியின் 'வேதபுரத்து வியாபாரிகள்' நாவலில் வருகிற கஜானா அது, ஒருநாள் திடீரென்று இந்தக் கஜானா காணாமல் போய்விடுகிறது. இதைக் கேள்விப்பட்டதும் அந்த நாடு முழுவதும் பரபரப்பு எல்லாரும் பதறித் துடிக்கிறார்கள்.

இதையடுத்து, இந்தச் சம்பவத்தைப்பற்றிப் பல்வேறு விசாரணைகள் நடக்கின்றன. விதவிதமான அறிக்கைகள் வெளிவருகின்றன. ஆனால், தொலைந்துபோன கஜானாவைத்தான் காணவில்லை.

கடைசியில் மேற்சொன்ன அறிக்கைகள் குவித்து வைக்கப்பட்டிருக்கும் அதே அறைக்குள்தான், அந்தக் கஜானாவும் இருக்கிறது. இத்தனை நாளாக அதை யாரும் கவனிக்கவில்லை என்று அங்கதச் சுவையோடு கசப்பூட்டுகிறார் இ.பா.

Cont...4

## கவிதைகள்

### ஹைக்கூ!

**ஏழ்மை**
பள்ளிக்கூடம் கட்டுவதற்கு
செங்கல் சுமக்கும் சிறுமி!

**முதியோர் இல்லம்**
விழுதுகள் விரட்டி அடித்ததால்
ஆல மரங்கள் அடைக்கலம் புகுந்தன.

**மரம்**
வரம் வாங்கிக்கொண்டா வந்தாய்?
மாண்டாலும் நான்தான் மற்றவர்களை
சுமப்பேன் என்று.

**பரிகாரம்**
காட்டை அழித்து
வீட்டை கட்டினான்
பரிகாரமாய்
தொட்டில் செடி!

Compiled by : Mr. M. Kumar
Design

### தத்துவ மொழிகள்

சிரிப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள்
அது இதயத்தின் இசை!
சிந்திப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள்
அது சக்தியின் பிறப்பிடம்!
விளையாட நேரம் ஒதுக்குங்கள்
அது இளமையின் ரகசியம்!
படிக்க நேரம் ஒதுக்குங்கள்
அது அறிவின் ஊற்று!
உறவுக்கு நேரம் ஒதுக்குங்கள்
அது மகிழ்ச்சிக்கு வழி!
உழைப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள்
அது வெற்றிக்கு வழி!

Compiled by : Miss. V. Vinodhini
(D/O M/s. V. Rajakumari – Coating)

### அறிவிப்பு

நடைபெறவிருக்கும் 10வது(2012) அலுவலர் தினவிழாவின் குழந்தைகள் கலை நிகழ்ச்சியில் கலந்து கொள்ள விரும்பும் குழந்தைகளின் பெற்றோர்கள் தத்தம் பெயர்களை திருமதி. ஷாஹின் மணிகண்டன் (kutties@tianode.com) அவர்களிடம் பதிவு செய்து கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**குறிப்பு.** நிரந்தர பணியாளர்களின் குழந்தைகள் மட்டும் கலைநிகழ்ச்சியில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

**இப்படிக்கு**
**விழாக்குழு**

**பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் குடும்பத்தாரிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், கதைகள் வரவேற்கப்படுகிறது.**
**– Editor**

இதுபோல், எதை எங்கே வைப்பது என்ற தெளிவில்லாமல், வரைமுறை இல்லாமல், தேடுவதிலேயே பாதி நேரத்தைச் செலவிட்டுக் கொண்டிருக்கும் அசகாய சூரர்கள் இங்கே அதிகம் இப்படி அநாவசியமாக வீணாகிற நேரத்தையெல்லாம் மிச்சப்படுத்த வேண்டுமானால், பொருள்களைக் கையாள்வதில், சேமித்து வைப்பதில் நமக்குக் கொஞ்சம் ஒழுக்கமுறைகள் அவசியம்.

உதாரணமாக, ஒரு பெரிய நூலகத்தில் நமக்கு வேண்டிய எந்தப் புத்தகத்தையும் பத்து நிமிஷத்திற்குள் கண்டறிய வேண்டுமானால், அதற்கு அந்த நூலகத்தின் பொறுப்பாளர் சில விதிமுறைகளை ஒழுங்காகப் பின்பற்ற வேண்டியிருக்கிறது.

ஒருவேளை, அவர் இதையெல்லாம் கண்டுகொள்ளாமல் தனது விருப்பப்படி அல்லது வசதிப்படி புத்தகங்களை இறைத்து வைத்தால், யாராலும் தங்களுக்கு விருப்பமான புத்தகத்தைப் பத்து நிமிஷத்துக்குள் கண்டறிய முடியாது. அரை மணி நேரமாகலாம், ஒரு மணி நேரமும் அதற்கு மேலும்கூட ஆகலாம்.

ஆகட்டுமே, அதனால் என்ன போச்சு! என்று அலட்சியமாகக் கேட்கிறவர்களுக்கு, இன்னும் தெளிவாய்ப் புரியும்படி கிட்டத்தட்ட இதேமாதிரியான ஓர் உதாரணத்தைக் காண்போம்.

பெங்களூர் மாகாத்மா காந்தி சாலையில் (‘எம்ஜி ரோட்’ என்று சொன்னால், எல்லாருக்கும் சட்டென்று புரியும்) ஒரு பிரபலமான ‘பழைய புத்தகக் கடை’ இருக்கிறது. இதே வகையைச் சேர்ந்த மற்ற கடைகளைப்போல் புழுதியும் தூசும் பறக்காமல், மூன்று மாடிகளில் நன்கு விசாலமாகப் புத்தகங்களை அடுக்கி வைத்திருக்கிறார்கள், அநேகமாக, இந்தியாவிலேயே தங்களிடமிருக்கிற பழைய புத்தகங்களை, கம்ப்யூட்டரில் முறைப்படி வரிசைப்படுத்திப் பட்டியலிட்டு (index) வைத்திருக்கிற ஒரே கடை இதுதான்.

இரண்டு வருஷங்களுக்குமுன்பு, இதே கடைக்காரர் குட்டியூண்டு பத்துக்குப் பத்து அறையில் மூட்டை முடிச்சுகளோடு திணறிக் கொண்டிருந்தார். இப்போது மூன்று மாடிக் கட்டடம்! பெரிய அளவில் வியாபாரம், வெறும் பழைய புத்தக விற்பனையில் இதெல்லாம் எப்படிச் சாத்தியப்பட்டது?

தொடரும்...

## OUR NEW INVENTION

பகுதி தண்ணீர் மற்றும் பகுதி பெட்ரோலில் ஓடும் மோட்டார் பைக்

